Source: *Tamil Murasu*, p3
Date: 3 September 2019

# பசுமரத்தாணி போல் பதியும் மொழி

ஒரு குழந்தை பிறந்தவுடன் ஓரிரு ஆண்டுகளில் அது செவிமடுக்கும் மொழி அல்லது கிளைமொழி, அந்தக் குழந்தையின் மூளையில் பசுமரத்து ஆணிபோல் பதிந்துவிடுகிறது. அதை குழந்தை கடைசி வரை மறக்காது என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஆய்வு முடிவுகள் மே மாதம் வெளியான ‘சிறார் மனோவியல் அனுபவ சஞ்சிகை’ என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டு உள்ளன. பிறந்ததும் முதல் சில ஆண்டுகளில் வேறு ஒரு மொழியைக் கேட்டு வளர்ந்துள்ள பிள்ளைகள், பின்னர் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்வதில் சங்கடத்தை எதிர்நோக்கவில்லை என்பதும் தெரியவந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.